பக்கங்கள் எட்டு

Registered as a Newspa

அன்பளிப்பு

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 1 திங்கட்கிழமை (15-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 50

# வன்னியில் நிவாரண பணி: ஐ.நா. தூதரகம் நிறுத்தியது!

## ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமிலிருந்து தொண்டமானாறு, கெருடாவில் பகுதிகளை நோக்கி நேற்று முன் தினம் இரவு பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வப்போது பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன.

கடந்த பத்து நாள்களாக இவ்வாறு தாக்குதல்கள் விட்டு விட்டு நடத்தப்பட்டு வருகின்றன. (உ-8)

## ஸ்ரீலங்கா அரசின் கெடுபிடியே காரணம்

கொழும்பு, ஜனவரி 15

**ஸ்ரீலங்கா அரசின் கெடுபிடி நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள தகராறு காரணமாக வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்காகத் தான் மேற்கொண்டு வந்த நிவாரணப் பணிகள் அனைத்தையும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் நிறுத்திவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.**

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னியில் தஞ்சமடைந்திருக்கும் சுமார் மூன்றரை லட்சம் மக்களுக்கான நிவாரண வேலைகள் இதனால் தடைப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான — தங்குமிட வசதியில் இருந்து மருந்துப் பொருள்கள் வரையான — உதவிகளை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஊடாக வரும் லொறிகளின் எண்ணிக்கையை கூட்ட வற்புறுத்து

### அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 15

வன்னிப் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு —

தற்போது வவுனியா ஊடாக பொருள்களைக் கொண்டு செல்லும் லொறிகளின் எண்ணிக்கையை பத்து மடங்காக அதிகரிக்க வேண்டும்.

— இவ்வாறு வன்னியில் நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் தெரிவித்திருப்பதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

ஆனால் எல்லையூடாக அந்த எண்ணிக்கை அளவு லொறிகளை அனுப்ப இராணுவம் அனுமதிக்குமா என்பது சந்தேகமே என்று அகதிகளுக்கான ஐ. நா, தூதரக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மறுபுறத்தில் —

புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் பருவ மழை தவறியதால் அடுத்த சில மாதங்களில் பெரும் உணவுப் பற்றாக்குறை ஏற்படலாம் என நிவாரண அதிகாரிகள் எச்சரித்திருப்பதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

## யாழ். குடாநாடு மீதான அடுத்த கட்ட தாக்குதல் அடுத்த வாரத்திலாம்!

கொழும்பு, ஜன. 15

யாழ். குடாநாடு மீதான ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தை அடுத்த வாரத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடபகுதி இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ''திவயின'' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் போரிட்டு அவற்றை விடுவிப்பதே இந்த இரண்டாம் கட்ட நடவடிக்கையின் நோக்கம் என்றும்—

தற்போது படையினர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனில் விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டப்படுவதை தடை செய்க!

### லண்டனில் கதிர்காமர் கோரிக்கை

லண்டன், ஜன. 15

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பிரிட்டனில் நிதி திரட்டப்படுவதைத் தடுக்கும்படி அந்நாட்டு அரசாங்கத்திடம் ஸ்ரீ லங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

தற்போது பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அமைச்சர் கதிர்காமர், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சருடன் இன்று பேச்சு நடத்தவிருக்கின்றார்.

அப்போது மேற்படி விடயம் குறித்து அவர் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளுக்கு எதிராக கடுமையான கொள்கையைக் கடைப்பிடிக்கும்படி பிரிட்டிஷ் அரசை கதிர்காமர் கேட்டுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாக ''லண்டன் ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவித்தது.

புலிகள் தமது நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும்படி பிரிட்டனில் உள்ள தமிழர்களைக் கேட்டுக் கொள்கின்றனர் என்றும் —

புலிகளின் ஆதரவாளர்கள் பிரிட்டனில் இருந்து மாதம் ஒன்றுக்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் நிதியைச் சேகரித்து அனுப்புகின்றனர் என்றும் —

தமிழர்கள் அதிகமாக வாழும் ஏனைய நாடுகளான கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்தும் பெருமளவு பணம் புலிகளுக்கு திரட்டப்படுகிறது என்றும் —

அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள்ளார். (உ-3)

## படகுச் சேவை இன்று இல்லை

சாவகச்சேரி, ஜன.15

கிளாலி-பூநகரி படகுச் சேவை தைப்பொங்கலையொட்டி இன்று நடைபெற மாட்டாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## மேலும் 3 மின்மாற்றிகள் கிழக்கில் தகர்க்கப்பட்டன

கொழும்பு, ஜன. 15

கிழக்கில் மேலும் மூன்று 'டிரான்ஸ் போமர்கள்' (மின் மாற்றிகள்) நேற்று முன்தினம் சேதமாக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பெரிய கல்லாறு, களுவாஞ்சிக்குடி, மதியாபுரம் ஆகிய இடங்களில் உள்ள மின்மாற்றிகளை விடுதலைப் புலிகள் சேதமாக்கியிருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது.

கிழக்கில் கடந்த ஒரு மாதத்தில் 35 டிரான்ஸ் போமர்கள் சேதமாக்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன.

## பொன்னாலையில் புலிகள் தாக்குதலுக்கு சிப்பாய் பலி!

கொழும்பு, ஜன. 15

வலிகாமம் மேற்கு பொன்னாலைப்பகுதியில்நேற்றுமுன் தினம் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் சம்பவம் பற்றிய மேலதிக விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (உ-3-7)

### பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு

## யாழ். நகரைப் பிடித்து துருப்புகளை அங்கு குவித்திருப்பதால் என்ன பலன்?

### ஆங்கில வார இதழ் கேள்வி

கொழும்பு, ஜன. 15

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த பின்னர், ஸ்ரீலங்கா இராணுவம் வடக்கிலோ அன்றிக் கிழக்கிலோ பெரிய அளவிலான தாக்குதல் எதனையும் நடத்தாமல் இருப்பது —

இதன் போர் களத் திறனை சந்தேகப்பட வைப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

'றிவிரெச' இராணுவ நடவடிக்கையைத் திட்டமிட்டபோது உண்டான தவறுகளும் போர்க் களத்தில் ஏற்பட்டிருக்கும் வெறுமை நிலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று 'வீக்கென்ட் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வெளியான இராணுவ ஆய்வுக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அக்கட்டுரையின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

போர்க் களத்தில் இப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

இருளூற்ற தமிழர் வாழ்வில் ஒளியேற்றி நலம் சேர்க்க
விரைவில் வழிபிறக்க வேண்டி எல்லோருக்கும்
உதயனின் உளம்நிறை பொங்கல் வாழ்த்துகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## துரைராசா சிவசுப்பிரமணியம்

சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைராசா சிவசுப்பிரமணியம் (சித்திரன்) 04.01.96 U.K இல் காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி துரைராசா அவர்களின் அன்பு மகனாவார்.

இவரின் பூதவுடல் 09.01.96ல் U.K இல் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
ஆனந்தகுமார் [பெரியதம்பி]
(சகோதரன்)

நுணாவில் மத்தி,
காளிகோவிலடி,
சாவகச்சேரி.

(40182)

## மகேந்திரன் கார்த்திகா

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது புகையிரத வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்டவருமான செல்வி மகேந்திரன் கார்த்திகா 13 - 01 - 96 மாலை 10-30 மணியளவில் காலமானார்.

அன்னார் மகேந்திரன் (திருநெல்வேலி சந்தை), பத்மசலா ஆகியோரின் அன்பு மகளும், கவின்ஸ்சா, பிரதீப் ஆகியோரின் அன்புத் தங்கையுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 14 - 01 - 96 அன்று காலை 11-30 மணியளவில் மந்திகை ஆணை விழுந்தான் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
என். மகேந்திரன், ம. பத்மசலா
(பெற்றோர்)

பெற்பதி வீதி,
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(தற்போதைய முகவரி)
புகையிரத வீதி,
சாவகச்சேரி,
(மணல் புட்டி வீடு)

(39964)

திருமதி

## சோதிப்பிள்ளை சுவாமிநாதன்

உடுவிலைச் சேர்ந்த சோதிப்பிள்ளை சுவாமிநாதன் 14-01-1996 இல் மீசாலையில் காலமாகிவிட்டார்.

இவர் சுவாமிநாதனின் (உத்தரவு பெற்ற வியாபாரி) அன்பு மனைவியும், சரோயினிதேவி, தவேந்திரன் (மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், கிளிநொச்சி), தவராசா (உரிமையாளர், ஜனனி மில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகம்மா, காசிப்பிள்ளை, சரவணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், நல்லநாதன் (ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்), பரமேஸ்வரி, இராசசெல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தில்நாதன், பகீரதி, ஜனனி, ஜனகன், ஜெயந்தன், துவாரகன், ஹரப்பிரியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (14-1-96) பி. ப. 3 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. சுவாமிநாதன்
(கணவர்)
அம்பலவணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தற்போதைய முகவரி:-
ச. இரவிச்சந்திரன் இல்லம்,
சோதியம்மான் வீதி,
(விக்னேஸ்வரா பாடசாலை, முன் ஒழுங்கை),
மீசாலை மேற்கு, மீசாலை.

(40177)

## ஆறுமுகம் சின்னத்தம்பி

நல்லூர், திருநெல்வேலி கிழக்கு, இல. 445, இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பதிகளின் புதல்வன் சின்னத்தம்பி நேற்று (14 - 01 - 1996) காலை 6-30 மணியளவில் காலமானார்.

அன்னார் செல்லாச்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, பொன்னம்பலம், கணபதிப்பிள்ளை, தம்பிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், இராசரெத்தினம் (உடுவில்), திருமதி அன்னலெட்சுமி (திருநெல்வேலி), திருமதி இராசலெட்சுமி (உடுவில்), திருமதி சந்தானலெட்சுமி (ஆனைக்கோட்டை), மகாலிங்கம் (ஜேர்மனி), இராசலிங்கம் (இந்தியா), சிவலிங்கம் (கனடா), திருமதி தனலெட்சுமி (மானிப்பாய்), திருமதி ஜெயலெட்சுமி (கனடா) ஆகியோரின் தந்தையாரும், நவரெத்தினம், புஸ்பராசா, நல்லையா, மகாலிங்கம், திருமதி ஜெயராணி, திருமதி கௌரி, திருமதி செல்வராணி, குலசேகரம், ஜேசுதாஸன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14-1-96) பிற்பகல் 2-00 மணியளவில், மீசாலை, அல்லாரை தெற்கில் உள்ள அவரது தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்;
பிள்ளைகள்

தற்காலிக விலாசம்:
C/o. தங்கராஜா,
அல்லாரை தெற்கு,
மீசாலை.

(40976)

பங்களாதேஷ் அரசுக்கு வருவது போல காட்டி

# 10 ஆயிரம் தொன் நிறை ஆயுதங்களை புலிகள் வடக்கே கொண்டு வந்தனர்

கொழும்பு, ஜன. 15

பங்களாதேஷ் நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் கடிதத் தலைப்புப் போன்ற போலி கடிதத் தலைப்புகளைப் பயன்படுத்தி சுமார் பத்தாயிரம் தொன் நிறையுள்ள ஆயுதங்களை விடுதலைப் புலிகள் வடக்கே கொண்டு வந்துள்ளனர்.

பாதுகாப்பு வட்டாரங்களுக்கு இதுபற்றி தகவல்கள் கிடைத்திருப்பதாக 'தினமின' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை முடிவடைந்த கையோடு இவ்வாயுதங்கள் கொண்டுவரப்பட்டு படகுகள் மூலம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் தரையிறக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரியின் கூற்றுப்படி பத்தாயிரம் தொன் நிறையுள்ள இந்த ஆயுதங்கள் ரஷ்யாவிலுள்ள உக்கிரேனிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

அந்த அதிகாரிமேலும் கூறியதாவது:-

ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் விடுதலைப் புலிகள் தமது பணிமனை ஒன்றை கடந்த நவம்பர் மாதம் பர்மாவில் திறந்துள்ளனர். பங்களாதேஷ்பாதுகாப்பு அமைச்சுக்கு ஆயுதங்களைக் கொண்டுவருவதாக ஆவணங்களைச் சோடித்து, ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளும் திட்டம் இந்தப் பணிமனையிலேயே திட்டமிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூரிலும் லண்டனிலுமுள்ள இரு முகவர்கள் இந்த ஆயுத வியாபாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

உக்ரேனில் ஆயுதக் கொள்வனவுகளைச் செய்த இந்த இரு முகவர்களும் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்றும் தெரியவருகிறது. — என்றார்.

கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு இடங்களில் கொண்டுவந்து இறக்கப்பட்டதாகவும் —

அண்மையில் சிலாபத்திலுள்ள உடப்புப் பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்ட 448 கிலோ உயர் சக்தி வெடிமருந்தும் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத, வெடிப் பொருள்களின் ஒரு பகுதியே என கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து பெறப்பட்ட சாட்சியங்களிலிருந்து தெரிய வருகிறது என்றும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### இயங்குகின்றன

வலிகாமம் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருந்ததால் கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டிருந்த சாவகச்சேரி நகரசபையின் பொது நூல் நிலையமும் சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொது நூல் நிலையமும் கடந்த திங்கட்கிழமை முதல் பொது மக்களின் பாவனைக்காக மீண்டும் திறந்து விடப்பட்டுள்ளன.

### யாழ் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது உண்டாகியுள்ள வெறுமை நிலையை நோக்கும் போது, இராணுவத்தின் சக்தியும், பலமும் 'றிவிரெச' வுடன் தீர்ந்து போய் விட்டனவா என்றேகேட்கத் தோன்றுகிறது.

'றிவிரெச' தாக்குதலில் போது மிகப் பெரிய அளவில் விமான, ஆயுத, போர்த் தளபாட பக்க பலம் இருந்ததால்தான் இராணுவத்தால் யாழ்ப்பாணத்துக்கு முன்னேற முடிந்ததா என்ற கேள்வியும் எழுகிறது.

'றிவிரெச' நடவடிக்கையின் பின்னர் தொடர் இராணுவத் தாக்குதல்களுக்கு திட்டமிடப்படவில்லையா?

கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு யாழ்ப்பாணத்தை — வலிகாமத்தை — மட்டும் கைப்பற்றியது வெறுமனே துருப்புகளை அங்கேயே வைத்துக் கொண்டிருப்பதற்குத் தானா?

இந்திய இராணுவத்துக்கு உண்டான அனுபவத்தை ஸ்ரீலங்கா இராணுவத் திட்டமிடுவோர் மனதில் கொள்ளவில்லையா?

விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களும், அவர்களின் பெரும் எண்ணிக்கையான போராளிகளும் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள் என்பது தெரியாமலா இத்தனை கோடி ரூபா செலவில் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது?

முற்றுமுழுதாக ஆகாய, கடல் வழி விநியோகங்களையே தங்கியிருக்க வேண்டிய இன்னொரு இராணுவத் தாக்குதலை நடத்துவது ஏற்கனவே நிதிப்பளுவுடன் நொண்டியாகியிருக்கும் நாட்டிற்குக் கட்டுபடியானதா?

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னர் போர்க்களத்தில் வெறுமை நிலை உண்டாகியது ஏன்? சமாதானத்தைக் காண்பதற்கு நாடு இன்னும் எத்தனை காலத்துக்குக் காத்திருக்க வேண்டும்? — என்று அந்தக் கட்டுரையில் வினாக்கள் தொடுக்கப்பட்டுள்ளன. (அ)

### அடுத்த ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றியுள்ள வலிகாமம் பகுதியின் பாதுகாப்பை பொலீஸாரிடமும், போர் நடவடிக்கைகளில் தற்போது ஈடுபடாத இராணுவப் பிரிவுகளிடமும் ஒப்படைத்துவிட்டு, இந்த இரண்டாம் கட்ட தாக்குதல் நடவடிக்கைகளில் இராணுவத்தின் மூன்று விசேட படைப்பிரிவுகள் ஈடுபடும் என்றும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஏ-10)

### வன்னியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொடுப்பதில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் பங்களித்து வருகின்றது. ஆடைகள், சமையல் பாத்திரம் போன்றவற்றையும் அது அகதிகளுக்கு வழங்கி வருகின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் — கிளிநொச்சியில் — இந்த அமைப்பின் அலுவலகத்தில் தொலைத் தொடர்புக் கருவிகள் பொருத்தப்படுவதற்கு அனுமதி வழங்காமல் அரசு கெடிபிடி காட்டுவதாகவும்—

இதனால் அங்கு பணியாற்றும் தனது ஊழியர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது எனவும்—

உரிய கருவிகளை கிளிநொச்சியில் பொருத்துவதற்கு அனுமதிக்கும் வரை நிவாரணப் பணியை மீண்டும் ஆரம்பிப்பதில்லை எனவும் —

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தெரிவித்துள்ளது.


CHUNDIKULI GIRLS' COLLEGE

CENTENARY

We Congratulate our Alma Mater on the occasion of her HUNDREDTH ANNIVERSARY. May God guide her to go "FORWARD" from strength to strength.

Chundikuli Girls' College
Prefects Guild 1996

(40077)


# மரண அறிவித்தல்

## சதாசிவம்பிள்ளை விஜயரத்தினம்

யாழ்ப்பாணம், 162. கோவில் வீதி, நல்லூர் வடக்கை பிறப்பிடமாக கொண்டவரும், பருத்தித்துறை ரவி றோயல் கல்வி நிலையம், [புற்றளை, பிள்ளையார் கோவிலடி] புலோலி தெற்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம்பிள்ளை விஜயரத்தினம் [ஓய்வு பெற்ற அதிபர், யாழ்/சேணியதெரு வித்தியாலயம்] நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார் சவுந்தரம்மாவின் அன்புக் கணவரும், ஜெயதேவி (கனடா), நளினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ச. தியாகராஜா (கனடா) வின் அன்பு மாமனாரும், சுரேக்கா (கனடா), கந்திகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், இராசமணி (மம்மி) யின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இவரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (15-01-1996) நண்பகல் 12-00 மணியளவில் ஆணைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சவுந்தரம்மா (மனைவி)
நளினி (மகள்)

மே/ பா. க. தியாகராஜா
ரவி றோயல் கல்வி நிலையம்,
(புற்றளை பிள்ளையார் கோவிலடி),
புலோலி தெற்கு,
பருத்தித்துறை.

(40185)

# மாகாணசபைத் தேர்தல்: தெற்குகட்சிகள் சுறுசுறுப்பு

கொழும்பு, ஜன. 15

அறிவிக்கப்பட்டுள்ள வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளின் தேர்தல்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. தேர்தலில் குதிப்பதற்கான ஏற்பாடுகளில் பல்வேறு கட்சிகளும் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகின்றன.

வேட்பாளர்களை தெரிவு செய்வதிலும், பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதிலும் அவை ஈடுபட்டுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் போட்டியிட தனது தோழமைக் கட்சிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

அந்த முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஐயரத்தின இப் பேச்சுக்களை நடத்துகிறார்.

இந்த மாகாணங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னணியின் அமைப்பாளர்கள் ஆகியோர் அடக்கிய இரு விசேட கூட்டங்கள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கொழும்பில் நடந்தன.

பிரதி அமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திஸநாயக்காவை வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்துவது என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளதாக அறியவருகின்றது.

இரு மாகாண சபைகளையும் கலைத்ததை ஆட்சேபித்தும் அவற்றுக்கான புதிய தேர்தலை இடைநிறுத்தக் கோரியும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு புறத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள போதிலும் மறுபுறத்தில் தேர்தல் சம்பந்தமான ஏற்பாடுகளில் அக்கட்சியும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

ஐ. தே. கவின் நிர்வாகக் குழு அடுத்த வாரம் கூடும்போது மாகாணசபைக்கான தனது வேட்பாளர் பட்டியலை அக்கட்சி பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இ. தொ. கா இத் தேர்தலில் எவ்வாறு பங்குபற்றுவது என்பது குறித்து ஆராய்ந்து வருகிறது.

சப்பிரகமுவ மாகாணசபை தேர்தலில் ஏனைய மலையகத் தமிழ்க் கட்சிகளுடன் ஒன்றுபட்டு ஒரே பட்டியலில் போட்டியிடுவதா அல்லது கூட்டுச் சேராமல் தனித்து போட்டியிடுவதா என்பது குறித்து இ.தொ.கா ஆராய்கிறது.

இத்தேர்தலில் போட்டியிடுவது என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) யும் முடிவு செய்துள்ளது.

நவசமசமாஜக் கட்சியும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு யோசனைகள்: சிங்களவரின் ஆதரவு பெருகி வருகின்றது

### அமைச்சர் மங்கள கூறுகிறார்

கொழும்பு, ஜன. 15

''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அரசு முன்வைத்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது. இந்த யோசனைகளை அரசு கைவிடும் என தமிழ்க்கட்சிகளோ, தமிழ் மக்களோ தவறான கணிப்பைக் கொள்ளத் தேவையில்லை.

வெண் தாமரை இயக்கத் தலைவரும், தபால் தொலைத் தொடர்புத்துறை அமைச்சருமான மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரையும் கடந்த வாரம் சந்தித்துப் பேசிய அவர் இப்படிக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## இடம்பெயர்ந்த 571 ஆசிரியர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் இணைப்பு

கிளிநொச்சி, ஜன. 15

குடாநாட்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் 571 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளனர் எனவும் —

அவர்கள் தற்போது தங்கியிருக்கும் முகவரியை கிளிநொச்சி கல்விப் பணிமனைக்கு அறிவித்தால் அவர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு அவர்களை இணைக்க முடியும் எனவும் —

யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த 29 ஆசிரியர்களுக்கு நிரந்தர இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் —

கிளிநொச்சி மாவட்டத்துடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தரம் 3 ii இற்குரிய சம்பளத்தை வழங்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு பணித்துள்ளது எனவும் —

கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 54 பாடசாலைகளில் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் இயங்குவதாகவும் —

இப்பாடசாலைகளிலிருந்து இடம்பெயர்ந்தோர் வெளியேறிய பின்னரே பாடசாலைகளை முழுதாக ஆரம்பிப்பது பற்றி தீர்மானிக்க முடியுமெனவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-10-ரி)

## பால்மா விலை அதிகரிப்பு

''ஹைலண்ட்'' பால்மாவின் விலை 20 ரூபா 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 52 ரூபா 50 சதத்துக்கு விற்பனையான 400 கிராம் ஹைலண்ட் பக்கெட்டின் புதிய விலை 73 ரூபா.

ஏனைய சில பால்மா வகைகளின் விலையும் கடந்த மாதம்] அதிகரிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

400 கிராம் எடையுடைய —

அங்கர் 70 ரூபாவிலிருந்து 78 ரூபாவாகவும், நெஸ்பிறே 70 ரூபாவிலிருந்து 78 ரூபாவாகவும், லக்ஸ்பிறே 66 ரூபா 50 சதத்திலிருந்து 75 ரூபாவாகவும், ரத்தி 65 ரூபாவிலிருந்து 74 ரூபாவாகவும் விலை உயர்த்தப்பட்டிருந்தன.

(உ)

## தீர்வுத் திட்டத்தைத் திருத்த அதிகார அமைப்பு தேவை

### பத்து தமிழ்க்கட்சிகள் கூட்டாக வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 14

அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச அரசியல் தீர்வுதிட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கென அதிகாரமுள்ள கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

இவ்வாறு 10 தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் தங்களுக்குள் பேசி எடுக்கும் ஒருமித்த முடிவை, அரசாங்கத்திடம் எடுத்துரைத்து திருத்தங்களைக் கொண்டு வர வசதியாகவே இத்தகைய கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று தாம் கோருவதாகவும் அவை அரசாங்கத்திடம் சுட்டிக் காட்டியுள்ளனவாம்.

தபால், தொடர்புத் துறை அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன் தினம் தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேசிய போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

## விடிவதனைத் தாவேனடி!

தை மகளே நீ பிறந்தாயடி
தமிழருக்கு என்ன செய்வாயடி
மையலுடன் பொங்கியுனை அழைக்கின்ற
மண்ணை நாம் பிரிந்தோமடி
மாவிலையும் தோரணமும் தொங்குமடி
மங்கையவள் கோலமங்கே மின்னுமடி
கோவினங்கள் பால் நிறைய சொரியுமடி
கொண்டாட்டம் சிறப்பாக நடக்குமடி
அப்பாவும் அம்மாவும் இணைவாரடி
அடுப்பிலே புதுப்பனை வைப்பாரடி
செப்பமாய் பொங்கலினைச் செய்வாரடி
சிரிக்கின்ற தைமகளை அழைப்பாரடி
எப்போது அந்நாள் வருமிங்கேயடி
எழிலான பொங்கலது சிறக்குமடி
தப்பாமல் வலிகாமம் போனாலடி
தலைநாளை கொண்டாடி மகிழ்வோமடி
இப்போது பிறந்தவளே கேளேனடி
எங்களுக்கு விடிவதனை தாவேனடி!

-- காரை எம். பி. அருளானந்தன்

## போர் உழவு செய்வோம்

தொழுவினில் பசுவும் மாடும்
துயருடன் அம்மா என்று
அழும் ஒலிகேட்டு நாங்கள்
அழுகின்றோம் தொலைவில் நின்று
உழவனின் உதிரம் சிந்தும்
உறவுக்கு விளைமகள் ஏங்க
எழுகின்றாய் கதிரே இங்கு
ஏதுண்டு பசும்பால் பொங்க?

வீடுகள் வீழ்ந்த போதும்
வீழ்ந்திடா உறுதி பொங்க
ஆடைகள் தளர்ந்த போதும்
அசைவிலா வலிமை பொங்க
வாடிய வலிகாமத்தின்
வளம் துளிர்விட்டுப் பொங்க
கூடிப் போர் உழவு செய்வோம்
கொள்கையும் பாலும் பொங்கும்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## மகிழ்ச்சி பொங்குமா?

சோகம் பொங்கும் வாழ்வில் மக்கள்
சோர்ந்து தினமும் தவிக்கிறார்
ஆகும நல்ல காலம் என்று
ஆசை பொங்க நோக்கிறார்
தேசம் எங்கும் அமைதி நிலைத்தால்
தேசு பொங்கும் நிச்சயம்
மாதம் தையின் பொங்கல் மீண்டும்
மகிழ்சி பொங்கச் செய்யுமா?

— வாசுகி சிவராமலிங்கம்

## ஏக்கமே தானோ?

எந்தையும் தாயும் குலாவிய மண்ணில்
என் மக்களும் மனைவியும் வாழ்வது எப்போ?
தைமகள் பிறந்திடும் வேளையில் நாமும்
தர்மத்தைத் தேடியே தாழ்வுற வாழ்வ(த)ர?
பொங்கல் வைத்திடும் வேளையில் எமது
பொறுமையை விட்டே பொங்குவதெப்போ?
நல்லைமுருகனை நகரினில் வணங்க
எல்லையைத்தேடியே ஏங்கும் எமக்கு
தைமகள் வந்தும் தரணியில் பிறந்தும்
ஏதையுமே காணோம் ஏக்கமே தானோ?

— வண்ணை. சே. சிவராஜா

## இனித்திட வழியேதையா?

மங்களப் பொங்கல் செய்து
மனையினில் மகிழ்ந்து உண்டோம்
எங்களின் வளமும் வீடும்
எதிரியின் கையில் விட்டோம்
தங்கிட இடமும் இன்றித்
தவித்திடும் இந்த நாளில்
எங்களின் பொங்கல் இன்று
இனித்திட வழியே தையா?

— வ. யோகானந்தசிவம்

## சிறந்திடுமோ தைப்பொங்கல்?

ஊரெங்கும் இடியோசை
உணர்வொடுங்கச் செய்கிறது
போரெங்கும் சூழ்ந்தனால்
போக்கின்றி அலையும் நிலை
பாரெங்கும் பட்டினியால்
பைந்தமிழன் வாடுகிறான்
சீரெங்கும் இல்லாமல்
சிறந்திடுமோ தைப்பொங்கல்?

பொங்கிடுமேல் தன்மானம்
பொலிவுபெறும் எம்வாழ்வு
பங்கிடுமேல் தாயகத்தை
அடிமைநிலை மாறாகாண்
மங்கிடுமேல் மாற்றான் படை
மறத்தமிழன் கொடிபறக்கும்
தங்கிடுமேல் தமிழுணர்வு
தமிழீழம் தான் மலரும்!

— உரும்பிராய் கு. சி. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

குரக்கன் தேவை. இருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அண்ணா கோப்பி, ஐயாகடை, மீசாலை. (சி-3050)

Clutches (கிளச்சஸ்) தேவை. S. கமலநாதன், 33, பெரிய அரசடி ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (39962)

### தவறிவிட்டது

புத்தூர் சந்திக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் வங்கிப் புத்தகம், அடையாள அட்டை அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவார்ந்து கீழ் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். திருமதி கந்தையா சின்னதங்கச்சி, மே/பா சி. அம்பிகைபாலன். மீசாலை வடக்கு, வேம்பிராய் சந்தி, கொடிகாமம். (39961)

### கைவரைப் பலன்

உங்கள் கையின் அமைப்பும் அதில் உள்ள வரைகளும் குறிப்பன யாதென அறிய விரும்புகிறீர்களா? தொடர்பு: கங்காதரம், சரசாலை வடக்கு. (40196)

## பரீட்சை குறித்து ஆராய அழைப்பு

யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் இறுதிப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ-3)


**WE THE OLD GIRLS OF CHUNDIKULI**

**CONGRATULATE**

AND THANK OUR ALMA MATER
AS SHE STEPS FORWARD
INTO THE NEW ERA
MAY THE GOOD LORD
PROTECT AND GUIDE HER.

O. G. A
JAFFNA

(40179)



இன்னல்கள் நீங்கி
இன்பமாய் வாழ்ந்திட

**இனிய பொங்கலே வருக!**

தேனீர் இடைவேளையை சுவையாக பகிர்ந்திட, சாவகச்சேரியில் 15 வருடகால முன்னோடிகள்

**சிற்றுண்டிகள், குளிர்பானங்களிற்கு**

**கிருயோன் குளிரகம்**

இல, 2 புதிய சந்தை,
சாவகச்சேரி.



பொங்கல் திருநாளை முன்னிட்டு
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளங்கனிந்த
**பொங்கல் வாழ்த்துக்களை**
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ராகுல சூரியன்**
**புடைவை அகம்**

இல. 122, பிரதான வீதி,
பருத்தித்துறை.

(40073)



வடமராட்சியில்

**உதய சேவை**

வடமராட்சி வாழ் மக்களே!

பத்திரிகை வாங்குவதற்கென இனி நீங்கள் காலையில் கடைக்குப் போய்ச் சிரமப்பட வேண்டியதில்லை.

உங்கள் அபிமான நாளிதழ் உதயனை உதய வேளைப் பொழுதில் வீட்டிலேயே பெற்றுக் கொள்ள

**உதய சேவை**
ஆரம்பமாகிவிட்டது

விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**உதயன் கிளை நிலையம்**
பழைய பஸ்நிலையச் சதுக்கம்,
பருத்தித்துறை.



**இலட்சார்ச்சனையும் சங்காபிடேகமும்**

தமிழீழ மக்களின் இன்னல் நீங்கி அமைதி பெற கரவெட்டி கிழக்கு அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி கோவிலில் 18 – 1 – 96 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகி மறுநாள்வரை நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து 20 - 1 - 96 அன்று சனிக்கிழமை 1008 சங்காபிடேகமும் அன்னதானமும் நிகழும். அத்தருணம் அடியவர்கள் பங்குகொண்டு அம்பிகையின் அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம். அர்ச்சனையில் கலந்து கொள்ள விரும்பும் அடியார்கள் மேற்படி ஆலயக் குருக்களிடம் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்:
ஆலய குரு
சிவஸ்ரீ க. சோமசுந்தரக்குருக்கள்,
(அதிபர்)

(40178)



**உதயன்**
கிளை நிலையம்
பருத்தித்துறை

வடமராட்சி வாழ் மக்களே!

உங்கள் வசதி கருதி பருத்தித்துறையில் உதயன் கிளை நிலையம் இப்போது இயங்குகிறது.

★ விளம்பரம் ★ விநியோகம்

இவை சம்பந்தப்பட்ட உங்கள் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற கிளை நிலையத்தை நாடுங்கள்.

காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை திறந்திருக்கும்.

**உதயன் கிளை நிலையம்**
பழைய பஸ் சதுக்கம், பருத்தித்துறை.



**எமது பொங்கல் வாழ்த்துக்கள்**

யாழ்ப்பாணத்தில் இயங்கிய

**சுப்பஸோ வீடியோ**
(ரவி ஒளி கானம்)

உங்கள் படப்பிடிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும்
மற்றும் தொடர்புகளுக்கும்

வன்னியில்
**சிறி படப்பிடிப்பு கலையகம்**
407, சில்வா றோட்,
வட்டக்கச்சி.

தென்மராட்சியில்
**சுப்பஸோ வீடியோ**
(நுணாவில் சந்தி அருகாமை)
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/3155)



**இன்பத் திருநாள்**

மலரும் தைப்பொங்கலுடன் எமது தமிழீழ மக்களுக்கு
சுபீட்ச வாழ்வு கிடைக்க வாழ்த்துகிறோம்.
எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும்
தங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

தரமான
**சன் பிராண்ட் (SUN BRAND)**
**ரொபி, இனிப்பு வகைகள்**
தயாரித்து விநியோகிப்போர்

இப்போது இயங்கும் முகவரி:
**அளவை இனிப்புத் தொழிலகம்** (SUN BRAND)
வீரவாகு கட்டடம், பருத்தித்துறை

முன்பு இயங்கிய முகவரி:
பண்டத்தரிப்பு சாலை,
அளவெட்டி.

தாவடி - மானிப்பாய் சாலை,
கொக்குவில்.

(40076)



**மாட்டிறைச்சிக்கடை**

கைதடி

வாடிக்கையாளருக்கும், ஓடர் இறைச்சி பெறுபவர்களுக்கும், எனது தொழிலாளர்களுக்கும்
எனது இதயம் நிறைந்த

**தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

எஸ். எஸ். சோமசுந்தரம்
(உரிமையாளர்)

மாடுகள் விற்பனைக்கிருந்தால் கீழ் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

எஸ். எஸ். சோமு
வைரவர் கோவிலடி,
கைதடி, நுணாவில்.

(40180)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும்

**எமது பொங்கல் வாழ்த்துக்கள்!**

இல்லத்தரசிகளின் பாராட்டை பெற்ற
அண்ணா தயாரிப்புக்களான

★ கோப்பி ★ ஜீவாகாரம்
★ தோசை மா ★ அப்பம் மா
★ உழுந்து மா ★ அரிசி மா
★ ஒடியல் மா ★ புழுக்கொடியல் மா
★ மற்றும் இனிப்பு ரொபி வகைகள்.

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் தேவைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

**அண்ணா கோப்பிக் கடை**

கந்தசாமி கோவில் அருகாமை,
யாழ். வீதி,
கிளிநொச்சி.
ஐயா கடை,
மீசாலை.
(சி-3152)


# தோங்காய் திருட்டு அதிகரிப்பு

மிருசுவில், ஜன. 15

பளை, முகமாலை, எழுது மட்டுவாள் பகுதிகளில் தேங்காய் திருட்டு அதிகரித்து வருகிறது.

இரவு வேளைகளில் தென்னங்காணிகளுள் நுழையும் திருடர்கள் தோங்காய்களைப் பறிப்பதுடன் அந்த வளவுக்குள் வைத்தே தோங்காய்களை உரித்து எடுத்துச்செல்கின்றனர். (இ-111)

# எரிபுழுவால் மீனவர்கள் அச்சம்

செம்பியன்பற்று, ஜன. 15

வடமராட்சி கிழக்குக் கடலில் எரிபுழுக்கள் காணப்படுவதால் மீனவர்கள் அச்சம் அடைகின்றனர்.

கடலில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது இந்த எரிபுழுக்கள் திடீரென வந்து ஒட்டிக் கொள்வதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மருதங்கேணியைச் சேர்ந்த வைரவிப்பிள்ளை அண்ணாத்துரை (வயது-30) என்பவர் எரிபுழுவின் தாக்கத்துக்கு உள்ளாகி மருதங்கேணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (இ-36)


எமது

**தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

சிறந்த, நீதான அச்சுவேலைகளுக்கு
நாடவேண்டிய ஒரே இடம்

**சிவா அச்சகம்**

**அஷ்டலஷ்மி வெளியீட்டகம்,**

த.பெ. எண் 1 கைதடி.



எமது வாடிக்கையாளர்களுக்கு இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

**விநாயகர்**

**பொத்தக களஞ்சியம்**

(சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக)

★ அப்பியாசக் கொப்பி வகைகள் மற்றும்
★ காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள்
யாவும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.

பிரதான வீதி, — பருத்தித்துறை.
(40066)



**எமது பொங்கல் வாழ்த்துக்கள்**

★ பாடசாலைப் புத்தகங்கள்
★ உறுதிப்படிவங்கள்
★ அலுவலக எழுதுகருவிகள்
★ புதினப் பத்திரிகைகள்
என்பன எங்களிடம் கிடைக்கும்.

**ஜெ. சு. தூ. (J·S·T·)**

கோட்டடி, சாவகச்சேரி



**பொங்கல் வாழ்த்துக்கள்**

சுவையான! தரமான!!
சுத்தமான!!!

சைவ, அசைவ உணவு வகைகளை
காலை, மதியம், மாலை வேளைகளில்
24 மணி நேரமும் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்

**மணிமாமா உணவகம்**

(அரசினர் வைத்தியசாலை முன்பாக)

கண்டி வீதி, சாவகச்சேரி.



# லாவண்யா

**பல் மூக்குக் கண்ணாடி அகம்**



தங்கள் வாடிக்கையாளர்,
அன்பர்கள், ஆதரவாளர்
அனைவருக்கும்



பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்

உரிமையாளர்:— டாக்டர். றெஜி சொலமன்

கண்டி வீதி, சாவகச்சேரி.
(பிரதேச செயலகம் முன்பாக)
கிளை: யாழ் வீதி, நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகாமை)
(40167)



எமது பொங்கல் வாழ்த்துக்கள்

**சிவம் படப்பிடிப்பு கலையகம்**

(முன்னர் சுன்னாகத்தில் இயங்கியது)

உங்கள் படப்பிடிப்புத் தேவைகளைப் பூர்த்தி
செய்யவும், போட்டோக்களைப் பெற்றுக்கொள்ளவும்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

பழைய நீதி மன்றத்துக்கு முன்பாக,
கண்டி வீதி, சாவகச்சேரி.
(சேது சைக்கிள் களஞ்சியத்தில் தொடர்பு
கொள்ளவும்.)
(39956)



**ஸ்ரீ லிங்கா புத்தகசாலை**

யாழ். சாலை, கிளிநொச்சி

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது

**பொங்கல் திருநாள் வாழ்த்துகளை**

தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம்மிடம் சகல விதமான அளவுகளிலும், வடிவங்களிலும்
டயறிகளையும், கலண்டர்களையும் மலிவு விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும்

பாடசாலை அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள், நாவல்கள்,
சஞ்சிகைகள், கடித உறைகள், முத்திரை வகைகள்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

**ஸ்ரீ லிங்கா புத்தகசாலை,**

கிளிநொச்சி.



# புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக (அரசாங்கம் நடத்திய பரீட்சை வினாத்தாள் மாதிரியில்) 95ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றவேண்டிய மாணவர்களுக்காக 21-1-96 ஆம் திகதியிலும், 96ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக 28 - 1 - 96ஆம் திகதியிலும் மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் (விடையுடன்) வெளியிடப்படும். எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வெளியீடு:

**BOND** யாழ்ப்பாணம்.

(40175)



வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த

**தைப்பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.**

**“திரு வீடியோ விஷன்” & கலர் படப்பிடிப்பாளர்கள்**

உங்கள் இல்லங்களில் நிகழும் சகல மங்கள வைபவங்களையும் உங்கள் எண்ணம் போல்
வீடியோப் படமாக்கிடவும், கலர் படங்களை எடுத்திடவும் நாடவேண்டியவர்கள்.

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

கிளை:— ‘‘தேவீஸ் கட்டடம்’’,
2 ஆவது மேல்மாடி,
கண்டி வீதி, கிளிநொச்சி.

(இரு முகவரிகளிலும் எமது [illegible] சேவையை வழங்கி வருகிறது.) (40075)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஒரே நேரத்தில்

# கொழும்பில் 10 இடங்களை தகர்க்க புலிகள் திட்டமாம்!

கொழும்பு, ஜன. 15 கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பத்து இடங்களை ஒரே நேரத்தில் தகர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்துள்ள புலனாய்வுத் தகவல்களை அடுத்து கொழும்பில் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''த ஐலண்ட்'' இந்த விடயத்தைதலைப்புச்செய்தியாக வெளியிட்டுள்ளது.

சுமார் ஐநூறு கிலோ நிறையுடைய ரி. என். ரி. வெடிப்பொருள்கள் புத்தளம் மாவட்டம் உடப்பு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, புலிகளின் தாக்குதல் திட்டம் பற்றிய தகவல் வெளியானதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொழும்பில் களனிப் பாலம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றைத் தகர்க்க இந்த வெடிப்பொருள்களைப் புலிகள் பயன்படுத்தவிருந்தனர் என்று புலனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

வடக்கு, கிழக்கிலிருந்து புதிதாக வருபவர்களை அனுமதிப்பதில் மிக அவதானமாக இருக்கும்படி விடுதி உரிமையாளர்கள் மற்றும் வீட்டுக்காரர்களைப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

உடப்பு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட எட்டு ஆண்கள் மற்றும் ஒரு பெண் ஆகியோரை கொழும்பிலிருந்து சென்ற விசேட புலனாய்வுக் குழுவினர் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

— இவ்வாறு 'த ஐலண்ட்' மேலும் தெரிவித்தது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

15 — 01 — 1996

இரவு

★ 8. 02 — உயிர்ப்பூக்கள்
★ 8. 20 — கணப்பொழுது ''மேஜர் கபிலன்''
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

16 — 01 — 1996

காலை

★ 7. 02 — மாவீரவணக்கம்
★ 7. 10 — இன்றைய தாரகை
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து 8. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

## மாகாணசபை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத் தேர்தலில் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தனியாகக் கூடி ஆராய்ந்து வருகின்றது.

தேர்தல் குறித்து தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணிதிட்டவட்டமானகருத்து எதனையும் இதுவரை வெளியிடவில்லை. (உ-3)

பிரிகேடியர் ஜானக பெரேரா தலைமையில்

# கிழக்கு இராணுவ நடவடிக்கையில் புதிய யுக்திகள் பயன்படுத்தப்படும்!

கொழும்பு, ஜன. 15 ஸ்ரீலங்காப் படைகள் கிழக்கு மாகாணத்தில் விரைவில் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் இராணுவ நடவடிக்கை, வலிகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்; இலங்கை யுத்த வரலாற்றில் இதுவரை கைக்கொள்ளப்படாத பல போர்த் தந்திரங்கள், உத்திகள் கையாளப்படும்.

இராணுவ அதிகாரி ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இராணுவம், விமானப் படை, பொலிஸ் விசேட அதிரடிப் படை ஆகிய அனைத்துப் பிரிவுகளும் கிழக்கு மாகாண நடவடிக்கையின் போது ஈடுபடுத்தப்படும். ''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு தற்போது யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினர் எவரையும் கிழக்குக்கு அழைக்காமலேயே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையை வழிநடத்திய பிரிகேடியர் ஜானக பெரேராவே உத்தேச கிழக்குத் தாக்குதலுக்கும் தலைமை தாங்குவார் என நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

சூரியப்பிரகாசம் நடவடிக்கையின் போது திறம்படச் செயற்பட்ட ஏனைய பல அதிகாரிகளும் கிழக்குத் தாக்குதலுக்கு அழைக்கப்படவுள்ளனர்.

அவர்களில் ஒருவரான பிரிகேடியர் சரத்பொன்சேகா முன்னேற்பாடாக கிழக்கு மாகாணம் வெலிகந்த பகுதிக்கு ஏற்கனவே இடமாற்றப் பட்டுள்ளார்.

—இவ்வாறு ''லங்காதீப'' மேலும் தெரிவித்தது. (உ-10)

## காகித ஆலையில் தீ பரவியது

வாழைச்சேனை காகித ஆலையின் கழிவுக் கடதாசி களஞ்சியத்தில் திடீரென தீப்பிடித்ததாக அறிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு பகுதியினரும், ஊழியர்களும் சேர்ந்து தீ பரவாது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர் என்றும் —

தீ விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கிளிநொச்சி வை. எம். சீ. ஏ கூட்டம்

கிளிநொச்சி வை. எம். சீ. ஏ. யின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும்—

வருடச் சந்தாவைச் செலுத்தி இக்கூட்டத்திற்குச் சமூகம் தருமாறும்—

புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் செயலாளர் எஸ். ஜே. ஏ. டனி தெரிவித்துள்ளார்.

## மாலுமி பலி

பூஸா கடற்படை மாலுமி ஒருவர் நீச்சல் போட்டிக்காக கடலில் நீந்திப் பயிற்சிபெறும் போது கடலில் மூழ்கி மரணமானார்.

காலி கோட்டை கடக்கரையில் நடந்த இச்சம்பவத்தில் ஏ. ஏ. டி. சில்வா (20 வயது) என்ற மாலுமியே இறந்தவராவார். (உ-3)

# அமைச்சரவையில் ஓர் உளவாளி!

கொழும்பில் ஜன. 15 பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா மேற் கொண்டுவரும் அந்தரங்கப் பேச்சுவார்த்தைகள் பற்றிய தகவல்களை அமைச்சரவையைச் சேர்ந்த ஓர் அமைச்சரே ஐ. தே. கட்சிக்கு வழங்குகின்றார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகாவே வெளிப்படையாக இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த அமைச்சருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பது குறித்து அறிய கட்சியினர் ஆவலோடு இருப்பதாக ''ராவய'' பத்திரிகை தெரிவித்தது. (உ-10)

★ வன்னி மக்களுக்கோர் நற்செய்தி!

★ பொங்கலுடன் உங்கள் போக்குவரத்துக் கஷ்டங்கள் நீங்குகின்றன

# தமிழீழ போக்குவரவுக்கழக பேருந்து

யாழ். சாலை புதிய சேவை

இன்று (15-01-1996) முதல் ஆரம்பம்

1. செம்மலை - கிளிநொச்சி.

செம்மலையிலிருந்து முற்பகல் 7 மணிக்குப் புறப்பட்டு மாங்குளம் ஊடாக முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சியை அடைந்து பிற்பகல் 3.30 மணிக்கு அதே பாதை வழியாக இரவு 7 மணிக்கு செம்மலையைச் சென்றடையும்.

2. கிளிநொச்சி - துணுக்காய்

கிளிநொச்சியிலிருந்து முற்பகல் 8 மணிக்குப் புறப்பட்டு வவுனிக்குளம் ஊடாக முற்பகல் 11 மணிக்கு துணுக்காய் சென்று பின் பிற்பகல் 1. 30 மணிக்கு துணுக்காயிலிருந்து புறப்பட்டு அதே பாதை வழியாக பிற்பகல் 4. 30 மணிக்கு கிளிநொச்சியை சென்றடையும்.

3. மாத்தளன் - கிளிநொச்சி.

மாத்தளனில் இருந்து காலை 8. 30 மணிக்குப் புறப்பட்டு புதுக்குடியிருப்பை காலை 9 மணிக்கு சென்றடைந்து பின் முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பிலிருந்து புறப்பட்டு விசுவமடு ஊடாக கிளிநொச்சியை நண்பகல் 12 மணிக்கு சென்றடைந்து பின் கிளிநொச்சியிலிருந்து பிற்பகல் 4 மணிக்குப் புறப்பட்டு அதே வழியாக மாத்தளனை இரவு 7 மணிக்கு சென்றடையும்.

4. நல்லூர் - முருங்கன்.

படகுசேவை நடைபெறும் நாள்களில் நல்லூரிலிருந்து அதிகாலை 4. 30 மணிக்கு புறப்பட்டு ஜெயபுரம் ஊடாக முருங்கனை நண்பகல் 12 மணிக்கு சென்றடைந்து பின் பிற்பகல் 2 மணிக்கு முருங்கனிலிருந்து புறப்பட்டு அதே வழியாக நல்லூர் சென்றடையும்.

★ இன்று தொடக்கம் (15-1-96) தினமும் [illegible] சேவை நடைபெறும்.

இடம் பெயர்ந்தோருக்கு

## கூடாரம் அமைப்பதற்கு ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 15 வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவுப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு கூடாரம் அமைக்க ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

வடக்கு புனரமைப்பு செயலணிக் குழுவின் செயலாளர் சேனரத்தின இத்தகவலை வெளியிட்டார்.

'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் 20 வீதமான வீடுகளே சேதமடைந்தன எனவும் —

அவை அரச செலவில்திருத்தப்பட்டு மக்களுக்கு வழங்கப்படும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

அரச கட்டடங்களே பெரிய அளவில் சேதமடைந்தன என்றும் அவர் கூறினார். (உ-3)

## ஊர்காவல் படைக்கு மேலும் 80 மலையக தமிழ் இளைஞர்

கொழும்பு, ஜன. 15 நுவரெலியாவில் இருந்து மேலும் 80 மலையக தமிழ் இளைஞர்களை ஊர்காவல் படைக்கு சேர்த்துக் கொள்ளும்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மீகொடைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் ஊர்காவல் படைக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டபோது 150 மலையக இளைஞர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சென்றதாகவும் —

அவர்களில் 40 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஓயலாமா?

இன்று தை மலர்கிறது. உழவன் தன் தொழிலுக்கு— வாழ்வுக்கு— வளம் சேர்த்துச் செல்வம் தந்த உதயனுக்கு நன்றி தெரிவித்து, தானும் மகிழ்ச்சி கொண்டாடும் நாள் இது.

தை மாதத்தில், வீடு தானியத்தால் நிறைந்து விடுவதால், எதிர்வரும் மாதங்களில் பொருளாதாரக் கஷ்டம் இருக்காது என்பதாலேயே தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வழக்கு வந்தது.

அந்த ஆரம்பம், வாழ்வியலின் எல்லா அம்சங்களிலும் தை மாதத்தை — தைப் பொங்கலை— நம்பிக்கையின் வாசற்படியாக கொள்ளும் வழக்கத்தைத் தமிழர் மத்தியில் கொண்டுவந்தது.

அந்த வகையில் இன்றைய தைப்பிறப்பு தமது அவலங்களும், இன்னல்களும், துன்பங்களும், துயரங்களும் தீர வழிகாட்டமாட்டாதா என்று தமிழர் நெஞ்சங்கள் ஆதங்கப்படுகின்றன.

இன்றைய பொங்கல் பண்டிகை வழமையான களை இழந்து காணப்படுகிறது. மக்கள் மனங்கள் வேதனையால் வரண்டுவிட்டன.

கஷ்டங்கள், துயரங்கள், சோதனைகளைக் கண்டு துவண்டு விடுவது பொருத்தமா? அவை பற்றியே சதா எண்ணிக் கொண்டிருந்தால், கவலைப்பட்டால் நல்ல காலமும், நல்ல விளைவும் கிடைத்து விடுமா?

இவற்றில் இருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமாக என்ன செய்யலாம் என்று சிந்தித்துச்செயற்படுவதே பொருத்தமானதாகும்.

வேதனைகள், சோதனைகளைப் பாடமாக வைத்துச் சாதனைகளைப் படைக்கும் வண்ணம் மனதைப் பலப்படுத்த வேண்டும்.

இனிமேலாவது இப்போதைய நிலை உண்டாகாதிருக்கத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

நடந்தவைகள் நடந்தனவாக இருக்க, இனிமேல் நடப்பவை நல்லவையாக அமைவதற்கு உகந்த வகையில் உளத்தாலும், உடலாலும் உழைக்க எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வது அவசியம்.

தமிழர்கள் தமது தன்மானத்தையும், சுயகௌரவத்தையும் இழந்து அடிமைகளாக — சிங்களவர்களுக்கு அடுத்த இரண்டாந்தரப் பிரசைகளாக — வாழ்வதற்குத் தயாராக இல்லை.

இந்த நிலைப்பாட்டில் இருந்து வளர்ந்தது தான் இன்றைய தமிழர் நிலை. அந்த ஆரம்பத்துக்கும் நிகழ் நிலைக்கும் இடையில் தமிழர்கள் கண்ட பலதுறை இழப்புகள் அனந்தம். அனுபவித்த துயரங்களும் அளவற்றவை.

இதற்குப் பின்னர் அவர்கள் தமது ஆரம்ப நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முடியுமா? அந்த இலக்கை — தன்னைத்தானே ஆளும் இனமாக வாழும் நிலையை — எய்தும் வரை தமிழர்கள் ஓயக்கூடாது.

கஷ்டங்களை, இன்னல்களை, இடர்களை தற்காலிகமானவையாக நினைத்துக்கொண்டு இலக்கை அடைய இடையறாது உழைக்கும் மனப்பக்குவம் உள்ளவனே சுதந்திரத்தை அனுபவிக்க— விடுதலையைப் பெறுவதற்கு— தகுதியுடையவன்.

தைப்பொங்கல் போன்ற நாள்களில் தமிழர்கள் இதனைத் தமது நெஞ்சங்களில் ஆழமாக அலசி ஆராய வேண்டும்.

---

### விமானப் படைக்கு தனியார் விமானசேவை நிறுவனத்திடமிருந்து

# 5 'அன்ரனோவ்' விமானங்களை வாடகைக்குப் பெறுவதற்கு முயற்சி!

கொழும்பு, ஜன. 15

போர்முனைகளில் உள்ள படையினருக்கான விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத அளவுக்கு பாரதூரமான விமானப் போக்குவரத்துப் பிரச்சினையை ஸ்ரீலங்கா அரசு எதிர்நோக்கியதாகவும்—

அதனால் வேறு வழியின்றி தனியார் விமான சேவை நிறுவனங்களை நாட வேண்டிய நிலைக்கு ஸ்ரீலங்கா அரசு தள்ளப்பட்டுள்ளதாகவும்—

யுத்த முனையில் விமானங்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக—

தனியார் விமான சேவை நிறுவனம் ஒன்றிடமிருந்து 'அன்ரனோவ்' விமானங்கள் ஐந்தை, கசாகிஸ்தான் நாட்டு விமானிகளுடன் சேர்ந்து வாடகைக்கு அமர்த்த ஸ்ரீலங்கா அரசு முயன்று வருகின்றது.

''ரோய்ட்டர்'' செய்தி நிறுவனம் இதைத் தெரிவித்தது.

யாழ். நகரை படையினர் கைப்பற்றி ஒருமாத காலமாகியும் பத்திரிகையாளர் அங்கு அழைத்துச் செல்ல பாதுகாப்பு காரணம் அல்ல. விமானம் இல்லாததே காரணமாகும் என்றும் ''ரோய்ட்டர்'' மேலும் தெரிவித்தது. (உ-3)

---

## சுதந்திர வாழ்வு கிடைக்குக!

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது எமது மூதாதையர் வாக்கு. எமது கலாசாரத் திருநாளாகிய தைப் பொங்கல் தினம் வறுமை ஒழிப்பு புரட்சிக்கும், புதிய வாழ்வுக்கும் வழிகோலட்டும்.

சொந்த மண்ணிலே அகதிகளாகி துன்பமும், துயரமும் பெற்று அல்லலுறும் தமிழீழ மக்களுக்கு நிம்மதியான, சுதந்திரமான நல்வாழ்வு கிடைக்கட்டும்.

சத்தியமும், தர்மமும் என்றும் தோற்காது.

எமது பொங்கல் திருநாளில் தீயவர்களை சூரியன் சுட்டெரிக்கட்டும். தமிழ் நெஞ்சங்கள் பொங்கிப் பூரிக்க வழி பிறக்கட்டும்.

சோதனைகளைக் கண்டு துவண்டுபோகாமல் சாதனைகளை நோக்கி முன்னேற எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து யாவர்க்கும் வாழ்த்தும், நல்லாசிகளும் தந்து அமைகிறோம்.

— சுபமஸ்து —

*அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்.*
*இந்துமத குரு பீடாதிபதி*

---

### ஜி. சீ. ஈ. உயர்தரம்:

## செய்முறைப் பரீட்சைகள் 19 ஆம் திகதி ஆரம்பம்

கடந்த ஓகஸ்ட்டில் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குரிய பரதநாட்டியம் மற்றும் மனைப் பொருளியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 23 திகதி வரை நடைபெறவுள்ளன.

மனைப் பொருளியல் செயன்முறைப் பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்—

பரதநாட்டிய செயன்முறைப் பரீட்சை சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்திலும்— நடத்தப்படும்.

பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் இயங்கும் கல்வித் திணைக்களத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி சமர்ப்பித்து தங்களுக்குரிய திகதிகளை நிர்ணயம் செய்து கொள்ளுமாறு வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்து வன்னிப் பகுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கான பரதநாட்டிய செயன்முறைப் பரீட்சை, கிளிநொச்சி மகாவித்தியாலத்தில் நடத்தப்படும் என்றும்—

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும்—

மனைப் பொருளியல் செயன்முறைப் பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மட்டுமே நடத்தப்படும் என்றும்—

வலயம் ஒன்றில் கல்விக் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

---

### குண்டு வெடிப்பில்

## காயமுற்ற 2 சிப்பாய்கள் வாகன விபத்தில் பலி!

கொழும்பு, ஜன. 15

குண்டு வெடிப்பில் காயமுற்ற இரு சிப்பாய்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற டிரக் விபத்தில் சிக்கியதால் குண்டு வெடிப்பில் காயமடைந்த இரு சிப்பாய்களும் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

இந்தச் சம்பவம் திருகோணமலைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கப்பல்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இரு சிப்பாய்களே திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகையில் வழியில் இவ்வாறு உயிரிழந்தனர்.

---

## யாழ். இந்து அதிபராக மகேந்திரன் நியமனம்?

சாவகச்சேரி, ஜன. 15

தேசியக் கல்லூரிகளில் ஒன்றான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக இதுவரை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திரு. இ. மகேந்திரன் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

வடக்கு —கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கடந்த ஐந்தாம் திகதி இந்த நியமனம் தொடர்பான கடிதத்தை யாழ் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்திருப்பதாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

யாழ் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களின் ஒருவரான திரு. இ. மகேந்திரன் பாடசாலை நாள்களிலும் பின்னரும்விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு காட்டியவர். 'சுடர்' சஞ்சிகையின் ஆசிரியராக கடமையாற்றிய அவர் தற்போது ''இந்துசாதனம்'' பத்திரிகையின் கௌரவ ஆசிரியராகவும், சைவபரிபாலன சபையின் தலைவராகவும் யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

ஓய்வு பெற்ற யாழ் இந்து அதிபர் திரு. அ. பஞ்சலிங்கத்தின் இடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

---

## குடும்ப சுகாதார ஊழியர் தெரிவு

கொழும்பு, ஜன. 15

சுகாதார சேவைத்திணைக்களம் குடும்ப சுகாதார ஊழியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

மருந்துவமாது பயிலுனர்களை தேர்தெடுப்பதற்கு போட்டிப் பரீட்சை நடத்தப் படவிருக்கிறது.

18 தொடக்கம் 40 வயதுக்குக் இடைப்பட்ட பெண்கள் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் இதற்கு விண்ணப்பித்துக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நயகம், மலே வீதி கொழும்பு என விலாசமிடப்பட்டு இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

---

### இடம்பெயர்ந்த மக்களுக்கான

# நிவாரணப் பணியின் அவசியம் பற்றி ஸ்ரீலங்காவிடம் பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 15

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதலால் இடம் பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளையும், நிவாரணங்களையும் சரியான விதத்தில் வழங்க வேண்டிய தன் முக்கியத்துவம் குறித்து—

பிரிட்டிஷ் அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் வலியுறுத்தி உள்ளது.

யாழ்ப்பாணச் சண்டையினால் இடம்பெயர்ந்த பொது மக்களின் நிலைமை பெரும் கவலைக்குரிய ஒன்றாகும் —

ஸ்ரீலங்கா அரசாங்கம் நடத்திய தாக்குதல்களால் பொதுமக்களுக்கு உண்டான பாதிப்புகள் குறித்து எமது கவலையை அந்த அரசாங்கத்திடம் நாம் தெரிவித்துள்ளோம்.— என்று பிரிட்டிஷ் அரசின் வெளியுறவு, பொது நலவாய அலுவலகத்தைச் சேர்ந்த தென்னாசியப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் அவை ஏற்கனவே விடுத்த திட்டங்களின் பிரகாரம் உதவிகளையும், நிவாரணங்களையும் வழங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதித்தது குறித்தும் தமது அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளதாகவும்— அந்த அதிகாரி மேலும் சொன்னார். (அ)

---

## அம்பறையில் முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன

மட்டக்களப்பு, ஜன. 15

அம்பாறை மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

சகல படை முகாம்களைச் சுற்றியும் உயரமான முள் வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பிரதான வீதிகளில் உள்ள சோதனை நிலையங்களுக்கு நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

முகாம்களுக்கு முன்பாக உள்ள பிரதான வீதிகளில் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நடமாடும் பகுதியில் சைக்கிள், மோட்டார்சைக்கிள் [illegible] தற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (உ-3)

---

## அனுமதி அட்டைகள் விநியோகம்

சாவகச்சேரி, ஜன. 15

திறந்த பல்கலைக் கழகத்தில் 95/96 கல்வியாண்டுக்கு சுயதொழில் முயற்சி சிறுவாணிப முகாமைத்துவ சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பித்து தெரிவான மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். பல்கலைக் கழக உப அலுவலகத்தில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக நாள்களில் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் அனுமதி அட்டைகளைப் பெறுமாறும் —

பதிவுகளை எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா இணைந்த பல்கலைக் கழக கல்லூரியில் மேற்கொள்ளலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை அதிகரிக்க அரசுக்கு வற்புறுத்தல்

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இதுவரை காலமும் ஒவ்வொரு வாரமும் வழங்கப்பட்டு வரும் 315 ரூபா நிவாரணத்தை 450 ரூபாவாக உயர்த்த வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கோரியுள்ளன.

வடக்கு புனர்வாழ்வு செயலணிக் குழுவின் தலைவரும் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி. சில்வாவிடம் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் கட்சிகளுடன் நடந்த சந்திப்பின் போது இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவருவதாகவும்— உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும்—அமைச்சர் தமிழ்க் கட்சிகளிடம் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைகள் குறிப்பிட்டன.

(உ-3)

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது

**பொங்கல் வாழ்த்துக்கள்**

★ சமையல் பாத்திரங்கள் ★ சில்வர் பீங்கான்
★ சில்வர் ரம்ளர் ★ சில்வர் ட்றே
★ பிளாஸ்ரிக் பாய்கள் ★ கறி வாளிகள்
★ ஐஸ்கிறீம் கப்ஸ்

வாடகைக்கு கொடுக்கப்படும்

**வெள்ளை மாளிகை**
**அந்திய கால சேவை**

பெரிய அரசடி,
சங்கத்தானை, சாவகச்சேரி

## அரச துருப்புகள் கிழக்கே நகர்வு

ஸ்ரீலங்கா இராணுவம் தனது சில படையணிகளை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அனுப்பிக் கொண்டிருப்பது தெரியவந்திருப்பதாக பிரபல செய்தியாளர் அமல் ஜெயசிங்க பி. பி. ஸிக்குத் தெரிவித்திருக்கின்றார்.

அடுத்தசில தினங்களில் கிழக்கில் இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு அரசு தயாராவது போல் தெரிகின்றது. அதனாலேயே அங்கு துருப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றது.

வடக்கிலிருக்கும் படையினரை கிழக்கே நகர்த்தினால், யாழ்ப்பாணத்தில் திடீர் கெரில்லாத் தாக்குதல்கள் அதிகரிக்கவும் வாய்ப்புண்டு.

எப்படியாயினும் முன்னர் கிழக்கிலிருந்து வடக்கே கொண்டு சென்ற படையினரை உடனடியாக கிழக்குக்கு திருப்பிக் கொண்டு வருவதாயின் ஆகக் குறைந்தது ஒரு மாதமாவது தேவைப்படும்.

— இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-6)

## கெப்பிற்றிக்கொலாவை பகுதியை விடுதலைப் புலிகள் தாக்கலாம்!

### அநுராதபுரம் மாவட்ட எம்.பி. அச்சம்

கொழும்பு, ஜன. 15

கெப்பிற்றிக்கொலாவைப் பகுதியில் பெரும் தாக்குதல் ஒன்றைப் புலிகள் நடத்தப் போகின்றார்கள் என நான் சந்தேகிக்கின்றேன். எனவே விடுதலைப் புலிகளிடமிருந்து அந்தப் பிரதேசத்தைக் காப்பாற்றுவதற்கு ஆகக்குறைந்தது நான்கு பொலீஸ் படையணிகளையாவது அங்கு அனுப்பும்படி நான் அரசாங்கத்தைக் கோருகின்றேன்.

— இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார் பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ கரலியட்ட.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை மீது நாடாளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மதவாச்சி பகுதி கடந்த அரசாங்க காலத்திலும் தாக்குதல்களுக்கு இலக்கானது. இன்றைய ஆட்சிக் காலத்திலும் மதவாச்சி தாக்குதலுக்கு இலக்காகிறது.

ஐ.தே.க, ஊர்காவலர்களை நியமித்து அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கியது. ஆனால் அதற்குரிய பயிற்சியை வழங்கவில்லை. நாம் ஆயுதங்களை மட்டும் வழங்காமல் அவர்களுக்கு பயிற்சியும் வழங்க வேண்டும்.— இவ்வாறு அவர் கூறினார். (உ-3)

எமது வாடிக்கையாளர்களுக்கு
"மகாநதி"யின் தைப்பொங்கல் வாழ்த்துகள்!
சகல விதமான புடைவை தினுசுகளுக்கும்

**★ மகாநதி புடைவை அகம் ★**

4, சிறப்பு அங்காடி, — சாவகச்சேரி.

வாடிகையாளர்களுக்கு எமது
**பொங்கல் வாழ்த்துக்கள்**

★ ஆங்கில மருந்து வகைகள்
★ பால்மா வகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
மற்றும்
★ ஆடம்பரப் பொருள்களைப் பெற்றிட

**அம்பாள் மருந்தகம்,**

இல: 1, புதிய சந்தை,
சாவகச்சேரி.



★★ திறப்பு விழா ★★
இன்று 15 — 01 — 96 சாவகச்சேரியில்
ஆரம்பிக்கப்படுகின்றது
எங்களிடம்
★ வீரகேசரி ★ சஞ்சிகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**செல்வனா**
**புத்தக நிலையம்**

பிரதான வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக)
சாவகச்சேரி. (40171)



**சிவா நகைமாடத்தாரின் பொங்கல் வாழ்த்துகள்!**

தமிழீழத்தில் அமைதி நிலவவும், மக்கள் சுபீட்சமாக வாழவும் வேண்டி,
வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்
அன்றும், இன்றும், என்றும் தரமிக்க 22 கரட் நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**அருள்முருகன் நகையகம்** **சிவா நகை மாடம்**
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். யாழ். வீதி, சாவகச்சேரி.
(சி/2916)

தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்!
ஹப்பி ரெக்ஸ்ரைல் (ஹப்பி துணியகம்)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்.
நெல்லியடியில் இயங்கிவரும் எமது நிறுவனத்தின் புதிய கிளை நிறுவனம் தேவீஸ் கட்டடம், யாழ். வீதி, கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
முக்கிய குறிப்பு: எமது நிறுவனத்துக்கு வேறு எங்கும் கிளை நிறுவனங்கள் இல்லை.

**ஹப்பி துணியகம் HAPPY TEXTILE**

தலைமை நிறுவனம்:
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (40151)

கிளை நிறுவனம்:
தேவீஸ் கட்டடம்,
யாழ். வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக